**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 49/2021**
**U/s. 448,342,392,120(b) ,506(2) IPC**
**PROSECUTION WITNESS NO. 6 (LW.6 )**

| | |
|---|---|
| **Name** : ஜெயகாந்தன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**2,3** எதிரிகள் ஆஜர் இல்லை. **1** வது எதிரி **split up CC.No. 271/2026** ல் பிடிக்கட்டளையில் உள்ளார்.
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, செளந்தர்யா , தட்டச்சர்.**

<u>C.C.No. 49/2021 23.06.2026</u> **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 2.00**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் கீழவாசலில் குடியிருந்து கரந்தை கல்லூரியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 1 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கையெழுத்து அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 08.01.2021 ம் தேதி 8.30 மணியளவில் சம்பவயிடத்தை பார்வையிட்டு போலீசார் வரைந்த பார்வை மகசரில் நானும், பீரான் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பீரான் தற்போது 5 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் இல்லை. என் வீட்டிற்கு அருகில் வைத்து கையெழுத்து செய்தேன்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.